2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மை நகல்

முன்னிலை : திரு.எஸ்.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர், வாணியம்பாடி நகராட்சி.

**1.** வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான சி.என்.ஏ. சாலையில் அமைந்துள்ள பேருந்து நிலையம் IUDP வணிக வளாக முதல் தளத்தில் காலியாக உள்ள கடை எண்கள் **14.21.22.23.24.25.** மற்றும் **26** ஆகிய 7– கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்க நகரமன்ற தீர்மான எண்.338 நாள் 28.05.2018–ம் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டதில் 7–கடைகள் குத்தகை மூலம் ஒப்படைக்கப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் பல முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் கோர யாரும் முன்வராத நிலையில் மீண்டும் 20.01.2021–ம் தேதி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.01.2021–ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கடை எண்.25**

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்டவர் | ஒரு மாத வாடகை ஒப்பந்தப்புள்ளி தொகை | வைப்பு தொகை செலுத்திய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கே.அறிவழகன், த/பெ.குமார், 2/9,பள்ளிக்கூடத்தெரு, வள்ளிப்பட்டு, வாணியம்பாடி | ரூ. 4660 /– | ரூ.15000/ பஞ்சாப் நேஷனல் வங்கி வரைவோலை எண்.,235520 நாள் 19.01.2021 | நகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை ரூ.4000/– |
| 2 | சி.சங்கர் த/பெ, சின்னராஜ், 2/6,பள்ளிக்கூடத்தெரு, வள்ளிப்பட்டு, வாணியம்பாடி. | ரூ. 4655 /– | ரூ.15000/ பஞ்சாப் நேஷனல் வங்கி வரைவோலை எண்.,235518 நாள் 19.01.2021 | |

இந்நகராட்சி வருவாய் ஆய்வரின் 20.01.2021–ம் தேதிய அறிக்கையில் கடை எண்,25–க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்யில் கோரப்பட்டுள்ள மாத வாடகை ரூ. 4660/– மார்கெட் மதிப்பை விட கூடுதலாக உள்ளதால் மேற்படி கடையை ஒப்படைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கடை எண்.25–ஐ வரிசை எண், 1–ல் காணும் திரு. கே.அறிவழகன் என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்று கடை எண்.25–ஐ குத்தகை மூலம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்பபடுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திரு. கே.அறிவழகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதை ஏற்று கடையை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1321/2018/அ1
**தீர்மானம் எண்.173** அனுமதிக்கப்பட்டது

**2.** வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான சி.என்.ஏ. சாலையில் அமைந்துள்ள பேருந்து நிலையம் IUDP வணிக வளாக முதல் தளத்தில் காலியாக உள்ள கடை எண்கள் **14.21.22.23.24.25.** மற்றும் **26** ஆகிய 7– கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்க நகரமன்ற தீர்மான எண்.338 நாள் 28.05.2018–ம் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டதில் 7–கடைகள் குத்தகை மூலம் ஒப்படைக்கப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் பல முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் கோர யாரும் முன்வராத நிலையில் மீண்டும் 20.01.2021–ம் தேதி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.01.2021–ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கடை எண்.26**

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்டவர் | ஒரு மாத வாடகை ஒப்பந்தப்புள்ளி தொகை | வைப்பு தொகை செலுத்திய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கே.அறிவழகன், த/பெ.குமார், 2/9,பள்ளிக்கூடத்தெரு, வள்ளிப்பட்டு, வாணியம்பாடி | ரூ. 4655 /– | ரூ.15000/ பஞ்சாப் நேஷ்னல் வங்கி வரைவோலை எண்.,235521 நாள் 19.01.2021 | நகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை ரூ.4000/– |
| 2 | சி.சங்கர் த/பெ, சின்னராஜ், 2/6,பள்ளிக்கூடத்தெரு, வள்ளிப்பட்டு, வாணியம்பாடி. | ரூ. 4660 /– | ரூ.15000/ பஞ்சாப் நேஷ்னல் வங்கி வரைவோலை எண்.,235519 நாள் 19.01.2021 | |
| | | | | |

இந்நகராட்சி வருவாய் ஆய்வரின் 20.01.2021–ம் தேதிய அறிக்கையில் கடை எண்,26–க்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்யில் கோரப்பட்டுள்ள மாத வாடகை ரூ.4660 /– மார்கெட் மதிப்பை விட கூடுதலாக உள்ளதால் மேற்படி கடையை ஒப்படைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கடை எண்.26–ஐ வரிசை எண்,2 –ல் காணும் திரு. சி.சங்கர் என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்று கடை எண்.26–ஐ குத்தகை மூலம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திரு. சி.சங்கர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதை ஏற்று கடையை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1321/2018/அ1

**தீர்மானம் எண்.174** அனுமதிக்கப்பட்டது

3. பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 22.01.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 36 வரையிலுள்ள வார்டுகளில் பராமரிக்கப்படும் 2969 எண்ணிக்கை தெரு மின்விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தேவையான மின்சார உதிரிபாகங்கள் சப்ளை செய்தல் பணி. | 6.00 | 1) M/S. ROYAL AGENCIES, VELLORE | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) M/S. INDIAN AGENCIES, VELLORE | மதிப்பீட்டு தொகையை விட 0.20% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 22.01.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. ROYAL AGENCIES, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3123/2020/இ2.
**தீர்மானம் எண்.175** அனுமதிக்கப்பட்டது

4. குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 22.01.2021-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி கொடையாஞ்சி தலைமை நீரேற்று நிலையம், இராமையன் தோப்பு நீர்உந்து நிலையம் மற்றும் வாரச்சந்தை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குளோரினேஷன் யூனிட்டுகளுக்கு பிளிச்சிங் கரைசல் (sodium Hypochlorite solution) திரவ முறையில் சப்ளை செய்தல் பணி. | 9.90 | 1) ஸ்ரீ ராஜகணபதி இன்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட 0.68% குறைவு |
| | | | 2) ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட 1.03% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு ஸ்ரீ ராஜகணபதி இன்ஜினியரிங், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3124/2020/இ2

**தீர்மானம் எண்.176** அனுமதிக்கப்பட்டது

5. நகராட்சி துப்புரவு ஆய்வாளர் 22.12.2020 ஆம் தேதிய குறிப்பின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 166 பணியாளர்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.உரிமக் காலம் எதிர்வரும் 10.04.2021 உடன் முடிவடைவதால் தொடர்ந்து 11.04.2021 முதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக தனியாரிடமிருந்து பணியாளர்கள் பெறப்பட வேண்டியுள்ளது.தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 100% அனைத்து வீடுகளிலும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி, நுண் உர மையம் அமைத்து உரம் தயாரிக்கும் பணி போன்ற முக்கியமான பணிகளை மேற்கொள்ள தற்போது உள்ள தூய்மை பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள இயலவில்லை. எனவே, பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 166 தூய்மை பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திருப்பத்தூர் அவர்களின் தினக்கூலி விகிதத்தின்படி ஒருநாள் ஊதியம் மற்றும் பிற தொகைகள் கீழ்க்கண்டவாறு

| 12 மாதத்திற்கு | விபரம் (ஒரு பணியாளர்களுக்கு) | நபர் ஒன்றுக்கு ரூ. | தொகை ரூ.(166 நபர்களுக்கு) |
|---|---|---|---|
| 360 நாட்கள்(166 நபர்கள்) | 1 பணியாளர் | 352 | 21035520 |
| 166 நபர்கள் | காப்பீடு | 1200 | 199200 |
| 166 நபர்கள் | சீருடை | 1600 | 265600 |
| 166 நபர்கள் | பாதுகாப்பு உபகரணங்கள் | 1200 | 199200 |
| 166 நபர்கள் | EPF 13.61% | | 2862934 |
| | | மொத்தம் | 24562454 |
| நிர்வாகம் மற்றும் இதர செலவினம் | 10 சதவிகிதம்(24562454X10/100) | | 2456245 |
| | | நிகர கூடுதல் | 27018699 |

மேற்படி கணக்கீட்டின் படி ஒரு ஆண்டிற்கு ஏற்படும் உத்தேச செலவீனம் ரூ.2,71,00,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கபடுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அனுமதிக்கலாம்

**ந.க.எண்: 90/2019/எச்1**

**தீர்மானம் எண்.177** அனுமதிக்கப்பட்டது

6. பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் அமைந்துள்ள பாலாற்றின் குறுக்கே C.L. road, ஓம்சக்தி கோயில் அருகில் அமைந்து தரை மட்ட பாலம் முழுவதுமாக சேதமடைந்து பொது மக்கள் செல்ல இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பாலத்தை புதியதாக அமைக்க தேவையான மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் இதர விவரங்களக்கான அறிக்கையை அனுபவமுள்ள ஆலோசகர் (Consultant) நிறுவனம் மூலம் தயார் செய்தல். | 2.80 | 1) PAVITHRA ASSOCIATES, 4F, SRISTI APARTMENTS, MEDAVAKKAM, CHENNAI. | மதிப்பீட்டு தொகையை விட 0.18% குறைவு |
| | | | 2) SHINE CONSULTANCY, 17, MILITARY BAZZAR, CORPORATION OFFICE, VELLORE. | மதிப்பீட்டு தொகையை விட 2.50% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ1.

**தீர்மானம் எண்.178** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

7. பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் தினமும் வீடு வீடாக மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பையை பிரித்து நுண்ணுயிர் உரமாக்குதல் மையத்தில் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவற்றில் தினமும் மக்காத குப்பைகளை சேகரித்து சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால், Baling machine மூலம் பெண்டல் செய்ய தேவையான இயந்திரம் வாங்குதல். | 9.80 | 1) ஜி.என்.விஜயசீனிவாசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) எஸ்.சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.50% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ1.

**தீர்மானம் எண்.179** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

8. பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் வளையாம்பட்டு உரக்கிடங்கில் மல கசடு கழிவு கட்டமைப்பு அமைப்பதற்கு தேவையான வரைப்படம், மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் இதர விவரங்களக்கான அறிக்கையை தயாரிக்க அனுபவமுள்ள ஆலோசகர் (Consultant) நிறுவனம் மூலம் தயார் செய்தல். | 1.20 | 1) SHINE CONSULTANCY, 17, MILITARY BAZZAR, CORPORATION OFFICE, VELLORE. | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) PAVITHRA ASSOCIATES, 4F, SRISTI APARTMENTS, MEDAVAKKAM, CHENNAI. | மதிப்பீட்டு தொகையை விட 1.25% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ1.

**தீர்மானம் எண்.180** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

9. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் 30 எண்ணிக்கை குறுகிய உயர் கோபுர விளக்கு, உயர் கோபுர விளக்குகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், புதிய எல்.இ.டி விளக்குகளாக மாற்றுவதற்காக தேவையான உபகரணங்கள் வாங்குவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 2020-2021 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.181** அனுமதிக்கப்பட்டது

10. இந்நகராட்சிக்கு 2019-2020-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ4/3962/2019, நாள்:16.02.2021-ன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி வார்டு எண்.33 காந்தி நகர் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு Benches and Desks வழங்குதல். | 2.00 |

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1906/2019/இ1.

**தீர்மானம் எண்.182** அனுமதிக்கப்பட்டது

11. இந்நகராட்சி நகரமன்ற தீர்மானம் எண்.159 நாள் :31.12.2020-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதின்படி இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களை 2021-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதியுடன் முடிவடைகிற மூன்றாண்டு காலத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டு விடப்படும் குத்தகை தொகையுடன் 2022-2023-ஆம் ஆண்டுக்கு 5%உயர்வும் 2023-2024-ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டு (2022-2023) ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5%உயர்வின் அடிப்படையில் 2021-2022 ஆம் ஆண்டுக்கு 18.02.2021-ம் தேதி முதல் முறையாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டுள்ள குத்தகை இனத்திற்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு பொது ஏலத்தில் மட்டும் கலந்துகொண்டுள்ளனர். ஒப்பந்தப்புள்ளியில் இனம் 1 முதல் 7 வரை எவரும் கலந்துக்கொள்ளவில்லை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | பொது ஏலத்தில் கலந்துகொண்ட நபர்கள் பெயர் | 2021-2022-ம் ஆண்டுக்கு கோரியுள்ள ஏல கேள்வி தொகை | 2020-2021-ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகை தொகை | முன்றாண்டு சராசரி தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | S. கோவிந்தராஜ் | ரூ.1406000/- S.கோவிந்தராஜ் உயர்ந்தபட்ச ஏலத்தெகை | ரூ.1329615/- | ரூ.1267305/- |
| | | T.லோகேஷ் | ரூ.1402000/- | | |
| | | S. மணி | ரூ.1405000/- | | |
| 2 | நகராட்சி நவீன ஆடு அறுக்கும் கூடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | T.லோகேஷ் | ரூ.352500/- T.லோகேஷ் உயர்ந்த பட்ச ஏலத் தெகை | ரூ.326340/- | ரூ.311047/- |
| | | R. விக்னேஷ் | ஏலத்தில் கலந்துக் கொள்ளவில்லை | | |
| | | C.தீபன் | ரூ.352000/- | | |
| 3 | நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | T.லோகேஷ் | ரூ.551100/- | ரூ.521483/- | ரூ.497044/- |
| | | K.மோகன்ராஜ் | ரூ.551200/- K.மோகன்ராஜ் உயர்ந்தபட்ச ஏலத்தெகை | | |
| 4 | நகராட்சி பேருந்துநிலையத்தில் உள்ள காலியிடத்தில் வாகன பாதுகாப்பு நிலையம் அமைத்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் (மேல்நிலை தேக்கத் தொட்டி வளாகம் நீங்கலாக) | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை | | | |
| 5 | நகராட்சி எல்லைக்குள் நுழையும் சரக்கு லாரி மற்றும் இதர பொருட்கள் கொண்டு வரும் லாரிகளுக்கு சுங்க கட்டணம் (சனிக்கிழமை தவிர) இதர நாட்களுக்கு வசூலிக்கும் உரிமம் (ம) தனியார் குடிநீர் சப்ளை லாரிகளில் சேவைக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | C.கார்த்திக் | ரூ.226500/- C.கார்த்திக் உயர்ந்த பட்ச ஏலத் தெகை | ரூ.209475/- | ரூ.199658/- |
| | | பி.ரமேஷ் | ரூ.226000/- | | |
| 6 | நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் தரை மற்றும் தள்ளு வண்டிகளில் காய்கறிகள் பழங்கள் மற்றும் இதர பொருட்கள் வைத்து வியாபாரம் செய்தல் சுங்கம் வசூல் செய்தல் (சனிக்கிழமை தவிர பிற நாட்களில்) | K.மோகன்ராஜ் | ரூ.1501000/- | ரூ.1407892/- | ரூ.1341914 |
| | | V.பாலாஜி | ரூ.1500500/- | | |
| | | K.வெங்கடேசன் | ரூ.1506000/- K.வெங்கடேசன் உயர்ந்த பட்ச ஏலத் தெகை | | |
| | | S.மணி | ரூ.1505000/- | | |
| | | கே.பாரதி | ரூ.1503000/- | | |
| 7 | பக்ரீத் பண்டிகைக்கான விற்பனைக்கு வரும் ஆடு | | | | |

| | | |
|---|---|---|
| | மற்றும் மாடுகளுக்கான விற்பனை சனிக்கிழமை நீங்கலாக பண்டிகைக்கு முன்பின் 7-தினங்கள் வாரசந்தையில் வைத்து சுங்கம் வசூலித்தல் | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை |

வரிசை எண்.4 மற்றும் வரிசை எண்.7 இனத்திற்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. எனவே குறுகிய கால மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். வரிசை எண்.1,2,3,5,6 ஆகிய குத்தகை இனங்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டு குத்தகை இனங்களை காட்டிலும் ஏலக்கேள்வி தொகைகள் கூடுதலாக உள்ளது விவரம் வருமாறு.

| வ.எண் | 2020-2021 ஆம் ஆண்டு ஏலத்தொகை | 2021-2022 ஆம் ஆண்டிற்கு உச்ச ஏலம் கோரியவர்களின் பெயர் (திருவாளர்கள்) | 2021-2022 ஆம் ஆண்டிற்கு கோரியுள்ள ஏலத்தொகை | வித்தியாசம் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ரு.1329615 | S. கோவிந்தராஜ் | ரு.1406000/- | ரு.76385/- |
| 2 | ரு.326340/- | T.லோகேஷ் | ரு.352500/- | ரு.26160/- |
| 3 | ரு.521483/- | K.மோகன்ராஜ் | ரு.551200/- | ரு.29717/- |
| 5 | ரு.209475/- | C.கார்த்திக் | ரு.226500/- | ரு.63975/- |
| 6 | ரு.1407892/- | K.வெங்கடேசன் | ரு.1506000/- | ரு.98108/- |

மேற்கண்டவாறு பொது ஏலத்தில் 2020-2021 ஆம் ஆண்டு குத்தகை இனத்தொகையினை காட்டியிலும் 2021-2022-ம் ஆண்டிற்கு உச்சக்கேள்வி தொகைகள் கூடுதலாக உள்ளதால் குத்தகை ஊர்ஜிதம் செய்யலாம்.

அ.கு வரிசை எண்.1,2,3,5,6 ஆகிய இனங்களுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டு கோரியுள்ள குத்தகை தொகையை ஏற்று குத்தகை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மீதமுள்ள வரிசை எண்.4,7-க்கு குறுகிக கால மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3286/2020/அ1

**தீர்மானம் எண்.183** அனுமதிக்கப்பட்டது

12. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு உட்பட்ட 36 வார்டு பகுதிகளில் கொரோனா வைரஸ்(கோவிட்-19) தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கும்,தேர்தல் பணிகளின் போது வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் நோய்த்தடுப்பு பணிகள் செய்வதற்கும் தேவையான கீழ்க்கண்ட பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரு.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>தேவையான பொருட்கள்</u>

1) சுண்ணாம்பு - 10 டன்
2) பிளிச்சிங் பவுடர் - 5 டன்
3) பினாயில் - 500 லிட்டர்
4) ஆசிட் - 100 லிட்டர்
5) லைசால் - 1000 லிட்டர்
6) மூன்றடுக்குமுககவசம் - 5000
7) சானிடைசர் - 300 லிட்டர்
8) கையுறை - 1000

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:3417/2020/எச்1

**தீர்மானம் எண்.184** அனுமதிக்கப்பட்டது

13. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் நகராட்சி துாய்மைப் பணிகளுக்காகவும், நோய்த்தடுப்பு பணிகளுக்காகவும் கீழ்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ஜேசிபி(JCB) TN83 C 9579 | 1 |
| 2 | பாப் கேட் (Bobcat) TN83 C 3813 | 1 |
| 3 | கனரக லாரி TN23AY7011-TN83 B 3102 | 2 |
| 4 | சிறிய வகை லாரி (Tata Ace) | 7 |
| 5 | புகை மருந்து அடிக்கும் வாகனம் (Piaggio) TN23 BS 9848 | 1 |
| 6 | தண்ணிர் டேங்கர் லாரி TN23 AY 7012 | 1 |

மேற்கூறிய இந்த வாகனங்களுக்கு 2021-2022-ம் ஆண்டிற்கு எரிபொருள் பராமரிப்பு செலவினம் சாலை வரி மற்றும் காப்பீடு கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.30.00/- இலட்சம் பொது நிதியில் செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.482/2021/எச்1
**தீர்மானம் எண்.185** அனுமதிக்கப்பட்டது

14. இந்நகராட்சிக்கு 2020-2021-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ4/003/2020, நாள்:18.02.2021-ன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி வார்டு எண்.05 நியாய விலை கடைக்கு ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின்விசை பம்பு மற்றும் பராமரிப்பு பணி மற்றும் மின்சார வசதி, வர்ணம் பூசுதல் பணி. | 3.00 |

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1602/2020/இ1.
**தீர்மானம் எண்.186** பதிவு செய்யப்பட்டது

15. இந்நகராட்சிக்கு 2020-2021-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ4/003/2020, நாள்:18.02.2021-ன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி வார்டு எண்.15 இராமையன் தோப்பு பகுதியிள் புதிய அம்மா மினி மருத்துமனை கட்டிடம் கட்டுதல் பணி. | 16.00 |

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1602/2020/இ1.
**தீர்மானம் எண்.187** அனுமதிக்கப்பட்டது

16. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.01 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், தண்ணீர் தொட்டிகள் ஆகியவற்றின் மூலம் பொது மக்களுக்கு தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தேவையான உதிரிபாகங்கள் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 2020-2021 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.377/2021/இ2.

**தீர்மானம் எண்.188** அனுமதிக்கப்பட்டது

17. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 விஸ்.வி.வி.சாலை, வார்டு எண்.19, கோவிந்தபுரம், வார்டு எண்.29, நேதாஜிநகர் வடக்கு மற்றும் வார்டு எண்.30 நேதாஜிநகர் தெற்கு ஆகிய இடங்களில் பழுதடைந்து பயன்பாடு இல்லாமல் உள்ள சிறுமின் விசை பம்பு மற்றும் தண்ணீர் தொட்டி ஆகியவற்றை சரி செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 2020-2021 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.377/2021/இ2.

**தீர்மானம் எண்.189** அனுமதிக்கப்பட்டது

18. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளுக்கு இராமையன் தோப்பு மற்றும் கொடையாஞ்சி தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள பாலாற்று கிணறுகளிலிருந்து தண்ணீர் உறிஞ்சப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த கிணறுகளில் அமைந்துள்ள கேபிள், மோட்டார் மற்றும் உதிரிபாகங்கள் அவ்வப்போது பகுதடைவதால் இதனை உடனடியாக சரி செய்து பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பீடு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 2020-2021 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.377/2021/இ2.

**தீர்மானம் எண்.190** அனுமதிக்கப்பட்டது

19. பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 19.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள தெருக்களில் BOV மூலம் தினமும் வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பெறப்பட்டு பின்பு நுண்ணுயிரி உரமாக்கும் மையத்தில் சேகரிக்கப்பட்டு வரும் BOV வாகனம் பழுதடைந்த 12 BOV வாகனத்தை சரி செய்தல் பணி. | 6.50 | 1) VSL INDUSTRIES, 30, KI SHED, 23RD EAST CROSS ROAD, GANDHI NAGAR, VELLORE. | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) SNEHA ENTERPRISES, 30A, 23RD EAST CROSS ROAD , 23RD EAST CROSS ROAD, GANDHI NAGAR, VELLORE. | மதிப்பீட்டு தொகையை விட 1.50% அதிகம் |
| 2 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள தெருக்களில் BOV மூலம் தினமும் வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பெறப்பட்டு பின்பு நுண்ணுயிரி உரமாக்கும் மையத்தில் சேகரிக்கப்பட்டு வரும் BOV வாகனம் பழுதடைந்த 9 BOV வாகனத்தை சரி செய்தல் பணி. | 9.70 | 1) SHREE BHAIRAVA GREEN LINESS, 1, KAMARAJ STREET, VAKKANAMPATTI, JOLARPET. | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) SHRI VAARI ENTERPRISES, 31/C, SEEVARAN IST STREET, PERUNGUDI, | மதிப்பீட்டு தொகையை விட 0.50% அதிகம் |
| 3 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள தெருக்களில் டீழுஏ மூலம் தினமும் வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பெறப்பட்டு பின்பு நுண்ணுயிரி உரமாக்கும் மையத்தில் சேகரிக்கப்பட்டு வரும் BOV வாகனம் பழுதடைந்த 6 டீழுஏ வாகனத்தை சரி செய்தல் பணி. | 6.00 | 1) VSL INDUSTRIES, 30, KI SHED, 23RD EAST CROSS ROAD, GANDHI NAGAR, VELLORE. | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) SNEHA ENTERPRISES, 30A, 23RD EAST CROSS ROAD , 23RD EAST CROSS ROAD, GANDHI NAGAR, VELLORE. | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு 19.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ1.

**தீர்மானம் எண்.191** அனுமதிக்கப்பட்டது

20. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பத்தூர் 14.12.2020-ம் தேதிய ந.க.எண். 5839/18/தி.மா.2 செயல்முறை ஆணையில் வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எப் பிளாக்:27 ந.எண்கள் 9/2, 3,4,5, 12/3, 25/5, 6, 26, 27/2 மற்றும் 28/1-ல் 9.08$^{1/2}$ ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைபிரிவிற்கு ம.வ.ந.ஊரமைப்பு உதவி இயகுநர், திருப்பத்தூர் மாவட்டம் வரன்முறைப்படுத்துதல் எண்.24(R)/2020 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 36766 ச.மீ (அ) 395742.60 ச.அடி (அ) 9.081/2 ஏக்கர் |
| 2 | மொத்த மனைகள் | : | 221 |
| 3 | விற்கப்பட்ட மனைகள் | : | 30 |
| 4 | விற்கப்பட்ட மனைகள் எண்கள் | : | 10-23, 25-33, 36, 37, 40, 41, 44, 45 |
| 5 | விற்கப்பட்ட மனைகள் பரப்பளவு | : | 41663.00 ச.அடி |
| 6 | விற்கப்படாத மனைகள் | : | 191 |
| 7 | விற்கப்படாத மனைகள் எண்கள் | : | 1-9, 24, 34, 35, 38, 39, 42, 43, 46-221 |
| 8 | விற்கப்படாத மனைகள் பரப்பளவு | : | 283044.50 ச.அடி |
| 9 | ஒதுக்கிய மனைகள் | : | 208 |
| 10 | திறந்தவெளி ஒதுக்கீடு | : | 30427.00 ச.அடி – 10.74% |
| 11 | விற்கப்படாத மனைகள் பரப்பளவு (பூங்கா பரப்பு நீங்கலாக) | : | 252828.00 ச.அடி |

விற்கப்படாத மனைகளான மனை எண்கள் 1-9,24,34,35,38,39,42,43,46 to 221 ஆகியவற்றிற்கு வளர்ச்சி கட்டணம் மற்றும் வரன்முறைப்படுத்துதல் கட்டணம் அரசாணை எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (3) நாள் : 05.02.2019-ன்படி கட்டணங்கள் செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளை பொருத்தமட்டில் அனைத்து மனைகளுக்கும் (அ) பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணங்கள் செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையினை பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தானப்பத்திர ஆவண எண்.7574/2020, நாள் :07.12.2020 மூலம் மனை பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி இடத்தின் மனுதாரர்களை திரு.A.முஸாயித் அப்துல்லா மற்றும் J.கரன் ஆகிய இருவரும் விற்கப்படாத மனைகளான மனை எண்கள் : 142, 143, 144, 145, 146, 147, 151, 152, 153, 154, 156, 168, 173, 174, 175, 176, 182, 183, 200 மற்றும் 201 ஆகிய 20 மனைகளுக்குரிய வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ரூ.2,02,000/- அரசு கணக்கிலும், வளர்ச்சி கட்டணம் ரூ.5,60,000/- இந்நகராட்சி கணக்கிலும் செலுத்தியுள்ளார்கள். மேலும் மேற்கண்ட 20 மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர்.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பத்தூர் அவர்களின் செயல்முறைகளின்படி திரு.A.முஸாயித் அப்துல்லா மற்றும் J.கரன் ஆகியோர் விண்ணப்பத்தின்படி மேற்கண்ட விற்கப்படாத 20 மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளாச்சி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதால் வார்டு :எப் பிளாக் :27 ந.எண்கள் 9/2, 3,4,5, 12/3, 25/5, 6, 26, 27/2 மற்றும் 28/1-ல் $9.08^{1/2}$ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனை எண்கள். 142, 143, 144, 145, 146, 147, 151, 152, 153, 154, 156, 168, 173, 174, 175, 176, 182, 183, 200 மற்றும் 201 ஆகிய 20 மனைகளை வரன்முறைப்படுத்தி உத்திரவு வழங்கவும் மேலும் விற்கப்படாத வரன்முறைபடுத்தப்பட வேண்டிய மனைகளுக்கு உரிய வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின்பு வரன்முறைப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு</u> :மனைபிரிவின் சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடுகளை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பத்தூர் அவர்களின் பெயரிலிருந்து ஆணையர், வாணியம்பாடி நகராட்சி என்ற பெயரில் மாற்றம் செய்து தரவும் மேற்படி மனைகளுக்கு உரிய கட்டணம் பெறப்பட்டு வரன்முறை படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3375/2020/எப்1

**தீர்மானம் எண்.192** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

21. வாணியம்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட வார்டுகளான 14,15,16,17,18,28,29,30,31,32,33 மற்றும் 34 வரை 12 வார்டுகளை தனியார் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்:10896/2012/பி3 நாள்:30.07.2012-ம் தேதிய கடிதத்தின் படியும் இந்நகர மன்றம் தீர்மானம் எண்:1285 நாள் 29.12.2011-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட புள்ளி விகிதத்தின் அடிப்படையிலும் மற்றும் நிபந்தனைகளின் படி1 நபருக்கு 1 நாளைக்கு தின கூலி ரூ.301/- ஆகவும் மற்றும் (ESI P.F மற்றும் safety Equipments) உட்பட ரூபாய்.81/- ஆகவும் மொத்தம் ரூ.382/- என தூய்மை பணிகள் தனியார் மூலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மேலும் கடந்த ஆண்டு நகர மன்ற தீர்மானம் எண்:162 நாள்:26.12.2019-ன் படி அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி நிறுவனத்திற்கு 26.12.2019-ம் தேதி முதல் 10.01.2021 வரை ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது 10.01.2021 உடன் அனுமதி காலம் முடிவடைகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்:10896/2012/பி3 நாள்:30.07.2012 மறுபடியும் ந.க.எண்:360813/2018/ஜே3 நாள் 11.12.2018 தேதிய செயல்முறை உத்தரவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த வாணியம்பாடி நகராட்சிக்கு 166 நபர்களை தனியார் மூலம் அமைத்துக்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் நகர மன்ற தீர்மானம் எண்:160 நாள்:26.12.2019-ன் படி தனியார் மூலம் பகுதி I-ற்கு 85 நபர்களையும் மற்றும் பகுதி II-ற்கு 81 நபர்களை ஆக மொத்தம் 166 நபர்களை அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவில் அனுமதிக்கப்பட்ட காலஅளவு 10.01.2021 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி நிறுவனம் தனது 22.12.2020 ஆம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்பணியினை ஓராண்டு காலம் நீட்டிப்பு செய்து வழங்குமாறும் தற்போதைய ஒப்பந்தத்தின் படியே பணியினை செய்யவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

துப்புரவு ஆய்வாளர்கள் தங்களது 22.12.2020 தேதிய அறிக்கையில் வாணியம்பாடி அருணை கம்ப்யூட்டர் நிறுவனத்திற்கு ஒப்பந்த காலம் 10.01.2021-ல் முடிவதாகவும் மேற்படி நிறுவனம் தூய்மை பணியினை எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்து மேற்படி நிறுவனத்திற்கு மூன்று மாத காலத்திற்கு சிபாரிசு செய்து நகரமன்ற தீர்மானம் எண்:160 பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

தற்போது தமிழக சட்டமன்ற தேர்தல் 06.04.2021–ம் தேதி நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் 10.03.2021-ம் தேதி நிர்ணயம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை தேர்தல் நடத்தை விதிகள் முடியும் வரை தற்காலிமாக நிறுத்தி வைக்கப்படவேண்டும். எனவே, ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான அருணை கம்ப்யூட்டர் நிறுவனத்திற்கு மீண்டும் ஒப்பந்த காலத்தை நீட்டித்து வழங்கப்பட வேண்டும். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி அனுமதிக்கப்பட்ட 3 ஆண்டு காலம் 10.12.2021-னுடன் முடிவடைகிறது. எனவே தற்போதைய ஒப்பந்ததாரரான அருணை கம்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு 11.04.2021 முதல் 10.12.2021 முடிய உள்ள காலத்திற்கு தற்போதைய ஒப்பந்தத்தின் படியே பணியினை செய்ய ஒப்பநத காலத்தை நீட்டித்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1.அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் தேர்தல் நடத்தை விதி அமுலில் உள்ளதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் படியும் இந்நகரமன்றம் தீர்மானம்:160 நாள்: 31.12.2020-ன் படி 166 நபர்கள் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள எட்டு மாத காலத்திற்கு 11.04.2021 முதல் 10.12.2021 வரை ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:**090/2018/எச்1

**தீர்மானம் எண்.**193 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

22. வாணியம்பாடி நகராட்சிக்கு எதிராக திரு.மதுரை பாருக் அஹமத் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.17758/2020- ல் வாணியம்பாடி கூடுதல் பேருந்து நிலையம் மற்றும் வாரச்சந்தை தொடர்பாக வழக்கு தொடுத்துள்ளார். எனவே, அதனை எதிர்த்து இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.M.கிருபாகரன் ஆஜராகவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்:** 3273/2020/அ1

**தீர்மானம் எண்.**194 அனுமதிக்கப்பட்டது

23.. இந்நகராட்சியின் 2020-21-ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு (**REVISED BUDGET ESTIMATE**) மற்றும் 2021-2022-ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு (**BUDGET ESTIMATE**) தயார் செய்து மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்:** 273/2021/பி1

**தீர்மானம் எண்.**195 அங்கீகரிக்கப்பட்டது

24. குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய நீர்தேக்க தொட்டியின் மூலம் குடிநீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இதன் மூலம் அவ்வப்போது ஏற்படும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார், கேபிள் மற்றும் பைப்புகளில் ஆகிய பழுதுகளை சரி செய்தல். | 9.90 | 1) எஸ்.சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) எஸ்.தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 1.20% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ2.

**தீர்மானம் எண்.196** அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

25. குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தினமும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கொடையாஞ்சி மற்றும் இராமையன் தொப்பு நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் உரிஞ்சப்பட்டு நகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதன் மூலம் அவ்வப்போது ஏற்படும் நீர் கசிவு மற்றும் குழாயில் ஏற்படும் பழுதுகளை சரி செய்தல். | 9.90 | 1) எஸ்.சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) எஸ்.தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ2.

**தீர்மானம் எண்.197** அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

26. குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள தெருக்களில் தினமும் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக விடுப்பட்ட இடங்களில் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகள் மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குதல் பணி. | 9.80 | 1) எஸ்.சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) எஸ்.தாமோதரன | மதிப்பீட்டு தொகையை விட 0.20% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ2.

**தீர்மானம் எண்.198** அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

27. குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 05.02.2021-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் கொடையாஞ்சி மற்றும் இராமையன் தோப்பு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பாலாற்று கிணறுகளின் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில், ஒன்பது உயர்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போது வர உள்ள கோடை காலத்தை முன்னிட்டு, மேற்படி ஆற்றில் அமைந்துள்ள கிணறுகளில் சில்ட்டுகளை (Slit) அகற்றுதல் பணி. | 9.90 | 1) எஸ்.சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) எஸ்.தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 05.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ2.

**தீர்மானம் எண்.199** அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

28. அரசாணை (ப) எண்.29, அலுவலக பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள். 25.02.2021-ல் தமிழ்நாடு நகராட்சிப் பொதுப்பணிப்பிரிவு பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது 59 லிருந்து 60 ஆக உயர்த்தியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1289/2020/சி1

**தீர்மானம் எண்.200** பதிவு செய்யப்பட்டது

2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மை நகல்

முன்னிலை : திரு.எஸ்.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர், வாணியம்பாடி நகராட்சி.

1. அரசாணை (நிலை) எண்.368, நிதித் (SFC-MC) துறை, நாள்:07.10.2020–ன்படி மாநில உயர்மட்டக் குழுவின் நேரடி பார்வையின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவசியமாக தேவைப்படும் அடிப்படை கட்டமைப்புகளுக்கான "ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் (One Time Special Scheme)" கீழ் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் வாணியம்பாடி சி.எல். சாலையில் கல்லாற்றின் குறுக்கே பொதுப் பணி துறைக்கு சொந்தமான பழைய தரை பாலத்தை மாற்றி புதிய உயர்மட்ட பாலம் கட்டுவதற்கும் பிரதான சாலைகளில் அமைந்துள்ள தெரு விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணிக்கு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.944/2018/இ1.
**தீர்மானம் எண்.171** அனுமதிக்கப்பட்டது

2.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்-12 அவர்களின் கடிதம் ந.க.எண்.5031/2020/அ3, நாள்:04.01.2021 மற்றும் ந.க.எண்.4741/2020/அ3, நாள்:04.01.2021 கடிதத்தின்படி கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.எஸ்.செல்வி, திரு.எம்.பிரசாந்த் மற்றும் திரு.எஸ்.தேவேந்திரன், ஆகிய மூவரும் வாணியம்பாடி நகராட்சிக்கு பணி இட மாறுதல் கோரியுள்ளதால் மேற்படி தூய்மை பணியாளர்களை வாணியம்பாடி நகராட்சியில் காலியாக உள்ள தூய்மை பணியாளர்கள் பணியிடத்தில் இந்நகராட்சியில் பணி அமர்த்திக்கொள்ள நகரமன்ற தீர்மானம் ஒப்புதல் பெற்று அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கள்ளக்குறிச்சி நகராட்சியில் நிரந்தர பணியிடத்தில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்களான திருமதி.எஸ்.செல்வி, திரு.எம்.பிரசாந்த் மற்றும் திரு.எஸ்.தேவேந்திரன், ஆகிய மூவரையும் வாணியம்பாடி நகராட்சியில் காலியாக உள்ள நிரந்தர தூய்மை பணியாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்துகொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.106/2021/எச்1
**தீர்மானம் எண்.172** அனுமதிக்கப்பட்டது